**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 22 ஆம் நாள் வியாழன் கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. க.இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No.299/2017** வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | சலாம் | **வயது** | : | 67 |
| **த.பெ** | : | முகமது பேக் | **தாலுக்கா** | : | சேத்துபட்டு |
| **கிராமம்** | : | சேத்துபட்டு | **தொழில்** | : | கடை வைத்துள்ளேன் |

**<u>22.01.2026 – வா.சா.1 குறுக்கு விசாரணை</u>**

1)நான் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் சொத்தில் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்ய வந்தார்கள், ஆகையால் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். யார் வந்தார்கள் என்றால் நிறைய நபர்கள் வந்தார்கள், பெயர் தெரியாது. நான் யார் மீது வழக்கு செய்துள்ளேன் என்றால் ரவி, சேகர், பட்டாபி, பானுமதி, மற்றும் மற்றவர்களின் பெயர்கள் ஞாபகமில்லை. மேற்படி நான் கூறும் நபர்கள் எந்த ஊரில் உள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி நபர்கள் எனக்கு அறிமுகம் ஆன நபர்களா அல்லது தெரியாத நபர்களா என்றால் தெரியாத நபர்கள் ஆவார். நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண் 145 ஆகும். விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 15 செண்ட் ஆகும்.

2)தாவா சொத்தை தற்போது யார் அனுபவித்து வருகிறார் என்றால் நான் தான் அனுபவித்து வருகிறேன். தாவா சொத்து எனக்கு எப்படி பாத்தியம் என்றால் 1989 ல் சர்வே நெம்பர் 145 ல் மொத்தம் 65 செண்டில் 15 செண்டை நான் தரணி அம்மாள் என்பவரிடமிருந்து நான் கிரையத்திற்கு பெற்றேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2026.01.23 11:19:08 +0530

District Munsif,
Polur.